IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 77/2021

Deposition of Witness : DW 3

Name : வேலாயுதம் (வயது – 60)

Father's Name /W/o : த/பெ ஆறுமுகம்

Religion : இந்து

Calling : –

Address : அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 05.03.2026.

## குறுக்கு விசாரணை

1. அண்ணாதுரை மற்றும் ஏகநாதனின் தந்தை எனக்கு என்ன உறவு முறை என்றால் என் தாய் மாமன் ஆவார்கள். அண்ணாதுரையின் தங்கை மணியம்மாளை நான் திருமணம் செய்துள்ளேன் என்றாலும் என் மகனுக்கு முனுசாமி மகளை திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். சாந்தமூர்த்தி வாலாஜா குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் மற்றும் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் பொய் வழக்கு.

2. ஏழுமலை சொத்திற்கு நான் மற்றும் பிரதிவாதிகள் சாந்தமூர்த்தியிடம் தகராறு செய்ததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் தகராறு செய்யவில்லை. நான் மற்றம் பிரதிவாதிகள் வாதியுடன் தகராறு செய்தததால் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் இந்த வழக்கு தாக்கல செய்யப்பட்டுள்ளது என்றால் நான் தகராறு செய்யவில்லை. வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் ஏழுமலை மற்றும் ஆறுமுகம் இருவருக்கும் பாகம் உள்ளது.

3. தாவா சொத்து யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் தெரியாது. தெரியாத சங்கதிகளுக்கு நான் பிரதிவாதியின் சம்பந்தி என்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் நான்தானா என்றால் முதல் புகைப்படத்தில் மட்டும் தான் நான் உள்ளேன். என்னிடம் காட்டப்படும் காணொளியில் நான் தகராறு செய்கிறேனா என்றால் முதல் காணொளியில் மட்டும் தான் நான் உள்ளேன் நான் தகராறு செய்யவில்லை.

**புகைப்படம் மற்றும் காணொளி வா.சா.ஆ – 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. ஏகநாதனின் சொத்தில் கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணறு தான் என் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு முன்பு மற்றும் பின்பும் களத்தூர் கிராமத்தில் வசிக்கவில்லை என்றால் சரிதான். எனவே எனக்கு சொத்து சம்பந்தமாக எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**